நிறைவேற்றுவார். சொன்னதை மட்டுமல்ல, சொல்லாததையும் செய்கிற, கலைஞர்போல் ஒரு முதலமைச்சர் இருக்கிறார் என்றால் அவர்தான் இந்த முதலமைச்சர். நிச்சயமாகச் செய்வார், நடக்கும்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

16—

CEmONC மையம்

***13010—திரு. செ. ஸ்டாலின் குமார்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

துறையூர் அரசு வட்ட மருத்துவமனையில் ஒருங்கிணைந்த அவசர கால மகப்பேறு மற்றும் பச்சிளங்குழந்தைகள் பராமரிப்பு மையம் (CEmONC) துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருச்சி மாவட்டம், துறையூர் அரசு தாலுகா மருத்துவமனை 50 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 400 வெளிநோயாளிகளும், 25 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று பயன்பெற்று வருகிறார்கள். தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டு 56 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வெளிநோயாளிகள் பிரிவு, மகப்பேறு பிரிவு, அவசரகால ஊர்திகள் நிறுத்துமிடம் ஆகியவை கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகின்றன. இந்த மருத்துவமனையில் மாதம் ஒன்றுக்கு சராசரியாக 30 பிரசவங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. தேசிய நலத் திட்டத்தின்மூலம் கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை, அறிவிப்பு எண் 65–ன்படி, Program Implementation Plan–ன்கீழ் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான பணிகள் 21–12–2022 அன்று மாண்புமிகு நகராட்சி

2023 ஜனவரி 12]

நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களால் அங்கு தொடங்கி வைக்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல், அதே மருத்துவமனையில் ரூ.51.55 இலட்சம் மதிப்பீட்டில் 6 Dialysis *இயந்திரங்களும் கடந்த மாதம் துவக்கி வைக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.*

திரு. செ. ஸ்டாலின் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய துறையூர் தொகுதி என்பது துறையூர் ஒன்றியம், உப்பிலியபுரம் ஒன்றியம், உப்பிலியபுரம் பேரூராட்சி, பாலகிருஷ்ணம்பட்டி பேரூராட்சி மற்றும் துறையூர் நகரத்தை உள்ளடக்கியது. எங்களுடைய தொகுதியில் உள்ள இந்தப் பகுதிகள் முழுவதும் கிராமங்களைச் சார்ந்த பகுதிகளாக இருப்பதால், துறையூர் ஒன்றியம் மற்றும் உப்பிலியபுரம் ஒன்றியங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களிலிருந்து வரக்கூடிய கர்ப்பிணித் தாய்மார்கள் துறையூர் அரசு மருத்துவமனைக்குத்தான் வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இங்குள்ள அரசு மருத்துவமனையில் சேர்கின்ற கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அதிக இரத்தக்கொதிப்பு, பனிக்குடத்தில் நீர் குறைவு, பனிக்குடம் உடைந்து கர்ப்பப்பை திறக்காமல் உள்ளவர்கள், சர்க்கரை நோயால் அதிக பாதிப்புக்குள்ளானவர்கள், பிரசவத்தின்போது குழந்தைக்கு மூச்சுத்திணறல் ஏற்படுதல், நச்சுக்கொடி கீழே அமைந்திருத்தல், அதிக உதிரப்போக்கு ஏற்படுதல் போன்ற எண்ணற்ற பிரச்சினைகள் ஏற்பட்டால் 50 கி.மீ. தொலைவில் உள்ள திருச்சி அரசு தலைமை மருத்துவமனைக்குத்தான்* refer *செய்கிறார்கள். எனவே, எங்களுடைய துறையூர் நகரத்தில்* Neonatal Intensive Care Unit*-வுடன்கூடிய* CEmONC Centre*-ஐ மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ.6 கோடி மதிப்பிலான அந்தக் கட்டடம் கட்டும் பணி கடந்த மாதம் 21 ஆம் தேதி தொடங்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல், 56 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய்*

மதிப்பீட்டில் ஏற்கெனவே மகப்பேறு பிரிவு, அவசரகால ஊர்திகள் நிறுத்துமிடத்திற்கான கட்டடம் ஒன்றும் கட்டித் தரப்பட்டது. அதுமட்டுமல்லாமல், கடந்த ஒன்றரை ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இன்னொரு பணி என்னவென்றால், ரூ.51 இலட்சத்து 55 ஆயிரம் மதிப்பீட்டில் 6 Dialysis இயந்திரங்கள் அங்கே நிறுவப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் கடந்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலுக்கேற்ப, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் 9–8–2021 அன்று 9 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுக் கட்டடம் கட்டும் பணியைத் தொடங்கி வைத்திருக்கிறார்கள். ஆக, ரூ.9 கோடியே 21 இலட்சம், ரூ.6 கோடி மற்றும் ஏற்கெனவே செலவிடப்பட்ட ரூ.1½ கோடி ஆகிய தொகைகளைச் சேர்த்தால் ஒட்டுமொத்தமாக அவர்களுடைய பகுதியிலுள்ள மருத்துவமனைக்கு மட்டும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால், கடந்த 1½ ஆண்டில் சுமார் ரூ.17 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பல்வேறு பணிகளின்மூலம் பல்வேறு கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டுள்ளன என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.

திரு. செ. ஸ்டாலின் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய துறையூர் பகுதியிலுள்ள அரசு மருத்துவமனையில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் பிரிவு கட்டடத்திற்கும், விபத்து மற்றும் அவசர தீவிர சிகிச்சைப் பிரிவுக்கான கட்டடத்திற்கும், Dialysis பிரிவு மற்றும் ICU Bed போன்ற வசதிகளைச் செய்து கொடுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இதைப் பெற்றுக் கொடுத்த மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும் துறையூர் தொகுதி மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்த அரசு மருத்துவமனையில் 1970 ஆம் ஆண்டு கட்டப்பட்ட புறநோயாளிகள் பிரிவுக்கான கட்டடத்தில்தான் இப்போதும் புறநோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஆகவே, துறையூர்

2023 ஜனவரி 12]

மருத்துவமனைக்கு புதிய புறநோயாளிகள் பிரிவுக் கட்டடமும், அதேபோன்று, உப்பிலியபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புறநோயாளிகள் பிரிவுக் கட்டடமும் கட்டித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர் தொகுதியில் ஏற்கெனவே இந்த மருத்துவமனைக்கு மட்டுமே ரூ.17 கோடி அறிவித்திருந்தோம். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், துறையூர் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூ.75 இலட்சத்தையும், பி. மேட்டூர் கிழக்கு துணை சுகாதார நிலையத்திற்கு ரூ.30 இலட்சத்தையும், சிறுநாவலூர் துணை சுகாதார நிலையம் கட்ட ரூ.30 இலட்சத்தையும், உப்பிலியபுரம் வட்டார பொது சுகாதார அலகு கட்டடத்திற்கு ரூ.50 இலட்சத்தையும் ஒதுக்கீடு செய்து, அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

17—

பேருந்து வசதி

*11704—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலையிலிருந்து துவரங்குறிச்சி வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?